**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.233/2021**
**Prosecution Witnesses :4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சுவிதா** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **நாராயணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.சரவணன் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.சிவசக்தி ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் பணி மாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 08.07.2019ம் தேதி 21.00 மணிக்கு திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.சரவணன் அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது சுப்புதாய் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 156/2019 பிரிவுகள் 279, 304(எ) இதச வாக வழக்கு பதிவு செய்து இவ்வழக்கின் புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி

வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை காவல் ஆய்வாளர் சிவசக்தி அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு 09.07.2019ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் கணேசன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்பு அன்றைய தினமே திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைக்கபபட்டிருந்த இவ்வழக்கில் இறந்த பாண்டிதுரை என்பவரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்வதற்காக பஞ்சாயத்தார்களுக்கு சம்மன் சார்பு செய்து பஞ்சாத்தார்கள் முன்னிலையில் காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **பிரேத விசாரணைஅறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்துள்ளார். எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி 10.07.2019ம்தேதி 10.30 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது தக்க இருநபர் ஜாமினில் விடுவித்துள்ளார். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களை வாகன தணிக்கைக்காக திருமங்கலம் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார். பின்பு இவ்வழக்கில் இறந்த நபருக்கு பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய மருத்துவர் திருமதி.உஷாராணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விசாரணை செய்து சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **வாகன தணிக்கை சான்றுகள் அ.சா.ஆ. 7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(எ) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்று சொன்னாலும் இறந்து போனவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நேரடியாக கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றாலும் இவ்வழக்கின் காண்பிக்கபட்டுள்ள சாட்சிகள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உருவாக்கப்பட்டது என்றாலும் இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.